விலை ரூபா 1-25
...Branch Library


# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 4 முஹர 15 இதழ் 222

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-9-1986


## மட்டு.நகரில் கமாண்டோக்கள்-மக்கள்விடுதலைப்படை கடும் சமர்

யாழ்ப்பாணம், சனி

மட்டு நகரில் முகாமிட்டுள்ள அதிரடிப்படையினர் மீது தமது மக்கள் விடுதலைப் படையினர்கடும் மோட்டார்த் தாக்குதல் மேற்கொண்டதில் பலகொமாண்டோக்கள்கொல்லப்பட்டும் பலர் காயமுற்றும் உள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டுநகரில் உள்ள கன்னங்குடா, தாண்டி, வவுணத்தீவு, குறிஞ்சாமுனை, காயமடு ஆகிய இடங்களில் தற்காலிகமாக முகாமிட்டுள்ள அதிரடிப் படையினர் மீது எமது மக்கள் விடுதலைப்படை கடும் மோட்டார்த் தாக்குதல் மேற்கொண்டுவருகின்றது. இதில் பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமுற்றும் இருக்கின்றனர்.

கடந்த 17ம் திகதி அன்று கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்தை நோக்கி முன்னேற முயன்ற அதிரடிப்படையினரை எஸ்.எஸ். 85 ரக, 80 எம். எம்' மோட்டார்த் தாக்குதல்மூலம் முறியடித்து தடுத்து நிறுத்தப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

● இலங்கை இனப்பிரச்னை தீர்க்கப்படாவிட்டால்

# இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்க ஆதிக்கம் ஏற்படும்

## சோவியத் பிராந்திய தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

**இலங்கையின் இன்றைய இனப்பிரச்னை தீர்க்கப்படாவிட்டால், அது இலங்கையின் நலன்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும். இப்படியான ஒரு நிலை, இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்கா தனது அதிகாரத்தை அதிகரிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்துவிடும்.**

இவ்வாறு அண்மையில்இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தசோவியத்வெளி விவகார அமைச்சின் தென் ஆசிய பிராந்தியத் தலைவர் ஏ. ஐ. வல்கோவ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஜயவர்த்தனவையும், வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்தையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய திரு. வல்கோவ், தனது அரசாங்கத்தின் குறிப்பாக ஆசியபசிபிக் பிராந்தியத்தின் சர்வதேசபந்தோபஸ்து முறை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

திரு, வல்கோவ் சோவியத் தலைவர்களின்சில குறிப்பீடுகள் பற்றியும் விளங்கப்படுத்தியுள்ளார்.

இக்குறிப்பீடுகளில் அவர், அணிசேரா நாடுகள் இயக்கத்தின் முன்னணி நாடென இந்தியாவை விபரித்துள்ளார். ஆனல் இக்குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை பேச்சுக்கள் ஒத்திவைப்பு

புதுடில்லி. செப். 19

இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசிற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும்இடையேயான மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தைகள் காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சுக்கள் ஏற்கனவே புதுடில்லியில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (எ)

## போராளிகள் படையினர்மீது சினைப்பர் தாக்குதல்

### ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்

யாழ்ப்பாணம், சனி

தொண்டமானறு இராணுவ முகாமிலிருந்து ரோந்து புறப்பட்ட இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் 'சினைப்பர்' தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்று மாலை 4 மணியளவில் தொண்டமானறு ராணுவ முகாமுக்கு அருகில்

(8ம் பக்கம் பார்க்க)

கடற்றொழிலாளி போன்று வேடம் தரித்த

## சிப்பாய்மீதுபுலிகள் துப்பாக்கிப் பிரயோகம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கடற்றொழிலாளி போன்று வேடமிட்டுவந்த இராணுவ சிப்பாய்மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அந்நபர் காயம் அடைந்ததாக புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது.

இது பற்றி அவ்வறிக்கை மூலம் தெரிய வருவதாவது:

இன்று காலையில் வல்வை இராணுவ முகாமின் மேற்குப் பகுதிக் கரையோரக் கடலில் கடற்றொழிலாளிபோன்று தோளில் வீச்சுவலை யொன்றைப் போட்டுக்கொண்டு, அரையில் ஓலைப்பறி ஒன்றையும் கட்டிக்கொண்டு, சாரமும் பெனியனும் அணிந்துகொண்டு கடலில் வலைவீசி மீன்பிடிப்பதுபோன்று இராணுவ சிப்பாய் ஒருவர் கடலில் நடமாடியதை மேற்குப் பகுதிக் கரையோரப் பாதுகாப்பு அரணில் 'சென்றி'யில் நின்ற விடுதலைப்புகள் அவதானித்தனராம்.

அப்பகுதியில் அவ்விதம் மீன் பிடிப்பவர்கள் எவரும் இல்லாமையாலும், அந்தப் பகுதியில் இராணுவத்தினருக்கு அஞ்சி யாரும் வலைவீசி மீன்பிடிக்கச் செல்வதில்லையென்பதை நன்கு அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இந் நாடகம் இராணுவத்தினரின் விளையாட்டுத்தான் என அறிந்து அவரைக் குறிபார்த்துச் சுட்டனர். சூடுபட்ட அவர் கடலில் தொப்

(8ம் பக்கம் பார்க்க)

எம்மவர்களின் எதிர்காலம் நோக்கி:

## பொருட்காட்சி நாளை வரைநீடிப்பு

அலுவலக நிருபர்

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி [சென் பற்றிக்ஸ்] யில் நடைபெற்றுவரும் பயனுள்ள பொருட்காட்சி பல ஆயிரக்கணக்கான மாணவர்களினதும், பொதுமக்களினதும் எதிர்கால நன்மை கருதி நாளை ஞாயிற்றுக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மறுமலர்ச்சிக் கழகமும் மாணவர் முன்னணியும் இணைந்து கடந்த 12ம் திகதி தொடக்கம் இப் பொருட்காட்சியை நடாத்திவருவது தெரிந்ததே.

நாளை இரவு 8மணிவரை பொருட்காட்சி நடைபெறும்.

(8ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பில் படையினரின் அசம்பாவிதங்களைக் கண்டிக்கும் வகையில் இன்று 20ம் திகதி தொடக்கம் 25ம் திகதிவரை பூரணஹர்த்தால் அனுஷ்டிக்குமாறுகோரி மட்டக்களப்பு நகர்ப்பகுதி எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (கூ-எ)

அசம்பாவிதங்கள் குறித்து

## 'பகிரங்க விசாரணைகுழு'வை உடன் நியமிக்கவேண்டும்

### —மட்டு. பிரஜைகள் குழு

கொழும்பு, வெள்ளி

"மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் குறித்து பகிரங்க விசார

[8ம் பக்கம் பார்க்க]

மட்டு. கார் குண்டு வெடிப்புச் சம்பவம்:

# 6 கமாண்டோக்கள் கொலை; 5-க்கு மேற்பட்டோர் காயம்

விடுதலைப் புலிகள் உரிமைகோரி அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

மட்டக்களப்பில் நடைபெற்ற கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொமாண்டோக்கள் ரோந்து சென்ற வாகனங்களுள் ஜீப்வண்டி ஒன்று தூக்கி எறியப்பட்டு பலத்த சேதமடைந்ததுடன் கொமாண்டோக்களில் 6 பேர் கொல்லப்பட்டனர். 5 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

"நேற்று முன்தினம் 10 மணியவில் மட்டக்களப்பு விமானநிலையத்தில் புதிதாக வந்திறங்கிய கொமாண்டோக்கள் 2 ட்ரக்குகளிலும், ஒரு ஜீப் வண்டியிலும் ஏறி லேக் வீதி வழியாக ரோந்து வந்தனர். அவ்வாகனங்கள் மட்டக்களப்பு மினிபஸ் நிலையத்துக்கு அருகாமையில் வந்துகொண்டிருந்த சமயம் எமது தரப்பினர் காரொன்றினுள் வைத்த அதி சக்தி வாய்ந்த குண்டொன்றினை வெடிக்கச் செய்ததில் கொமாண்டோக்கள் வந்த வாகனங்களுள் ஜீப்வண்டி தூக்கியெறியப்பட்டு சிதைந்தது. அதிலிருந்த 6 பேர் கொல்லப்பட்டதுடன்' 5 றிகும் மேற்பட்டவர்கள் படுகாயமுற்றனர்" (மா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை மாவிட்டபுரம். C 4200

வீடுகட்ட உகந்த 4 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் மாகியப்பிட்டி சந்திக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விஸ்வாமில், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (C 4660)

கட்டில் மெத்தைகள், தளபாடங்கள், Sanyo மினி கசற் றேடியோ, வயலின், Bath Tub, அலுமாரி, Baby Cot, glass book self, Pyrex வகைகள் கிளாஸ், கோப்பை, Formica சாப்பாட்டுமேசை, கதிரைகள், தேக்கு கண்ணாடி மேசைகள் Show Case, ஹோல் செற்றிகள், பித்தளைப் பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. M Thiagarajan 326, Main Street, யாழ்ப்பாணம். [சென்ற் சாள்ஸ் பாடசாலை அருகில்] [C4705]

புதிய/பழைய குளிர்சாதனப் பெட்டிகள், புதிய Deep Freezers Belling Cooker with oven, Imported baby cot, Dressing table, படிக்கும் மேசைகள், Micro oven, கசட் றேடியோக்கள் Pressure Cooker Choper Bike, Kenwood Chief, சுவர் மணிக்கூடுகள், Carpet, Celling fan, மின்சார சிங்கர் தையல் மெசின், Projector கறுப்பு வெள்ளை T V மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு S பத்மநாதன் திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்) C 4670

நல்ல நிலையிலுள்ள HONDA C G 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: No 38, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (C-4725)

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters] Standard- Portable விற்பனைக்குண்டு. தொடர்பு: Fudo Enterprises Jaffna Road Manipay. (Sivha Studio Bitsman அருகாமையில்) (C-4728)

எங்கள் கொம்பனி பாவித்துள்ள B M C 22ஸ்ரீ4 சிலிண்டர் டீசல் வாகனம் உடன் விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு வின்சர் தியேட்டர், யாழ்ப்பாணம். [C-4727]

20" ரெலிபங்கன் T.V. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: நியூவிக்டேர்ஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-4731)

மூன்று மாடி கட்டுவதற்குரிய ஒரு புறச்சுவரும், மற்றைய மூன்றுபக்க மதிலுடனும், நல்ல நீர்க்கிணற்றுடன் கூடிய 1½ பரப்புக் காணி 3-ம் குறுக்குத் தெருவில் அடைக்கலமாதா ஆலயத்துக்கருகில் உடன் விற்பனைக்குண்டு. வே. தேவதாஸ் 466/2 B, அர்ச். சுவாமியார் லேன், யாழ்ப்பாணம். (C-4817)

## விற்பனைக்கு

8 அடி நீளம் 10 அடி உயரமன தேக்கு கண்ணாடி Show Case கடைப்பாவனைக்குரியது உடன் விற்பனைக்கு, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் சாளிஸ் பாடசாலை அருகில்). (C 4706)

EN 1000 தொடர் இலக்கத்தைக் கொண்ட வொக்ஸ் வகன் கார் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் வந்து பார்க்கலாம் தொடர்பு தம்பு.இராசேந்திரன் இல 8A, கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணம். (C 4709)

இம்மாதச்சிரித்திரனில் அண்ணவியார் அண்ணச்சாமி, பெண் பார்க்கும் படலம் ஆகிய புதுமைப் படைப்புக்களை வாசிக்கத் தவறாதீர்கள். தொடர்பு 550, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம். (C 4714)

கரந்தன் சந்தியிலிருந்து கந்தசாமி கோவிலுக்குச் செல்லும் வழியில் 200 யார் தூரத்தில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் வசதியான நன்னீர் கிணறுள்ள இரண்டு தோட்டக் காணிகள் விற்பனைக்குண்டு (7 பரப்பு, 10½ பரப்பு) தொடர்பு கொள்ளவும். C. G. மணிக்குருக்கள் கைலாசபிள்ளையார் கோவில் 343, நாவலர் றேட் யாழ்ப்பாணம். (C 4722)

''பொமனேரியன்'' வெள்ளை நிறக் குட்டிகள் தடுப்பு ஊசி போடப்பட்டு. பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. ஒரு வயது உடைய ஆண் ''பொமனேரியன்'' ஒன்றும் விற்பனைக்கு உண்டு. த. சிதம்பரநாதன் முன்னாள் நல்லூர் M. P காரியாலயம் ஆடியபாதம் வீதி திருநெல்வேலி வடக்கு. (C 4718)

### FOR SALE

1 Mitsubishi Video HS 330 Made in Japan. 2. Automatic Voltage Regulators M. No SVC 2000N output 110 220. 3. Yashica (MG I) Camera with National AC. DC Flash PE 201 A. S Pillai, "Selvabawanam", Point Pedro Road, Kankesanthuri. (C-4688)

### வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வு, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகாலநரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய் கால வேதனைகள், மகப்பேற்றின்மை, குழந்தைகட்கும் சித்த ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D A M., Dr R. இலட்சுமண ஐயர் D.A.M. மங்களடதி வைத்தியசாலை, பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C 4580]

### கல்வி

A/L 87, 88 கலை வர்த்தக வினாவிடை வகுப்புக்கள் தபால்மூலம் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 75 சத முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும்:- நிர்வாகி, மொடோன் எடியுகேசன் சென்றர், கரவெட்டி. [C 4671]

### தேவை

மூலிகைகள் சேகரித்துத் தருவதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். மங்களபதி வைத்தியாசாலை, 41/5, சங்கிலியன் வீதி (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி) நல்லூர். C 4732

## வகுப்புகள்

A/L 88 க்கான விலங்கியல் [தொகுதிகளிலிருந்து] திரு. K. தம்பிராஜா அவர்களால் 21-9-86 ஞாயிறு 11-30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. தற்போதைய பிரபல ஆசிரியர்களான திருவாளர்கள் மகாதேவா, பத்மநாதன், சிவவீரசிங்கம், தம்பிராஜா மற்றும்பலர்கற்பிக்கும் இக் கல்வி நிலையம் புது இடத்தில் வசதியாக, பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளது. ''நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட்'' திருநெல்வேலி. [C4701]

கேக் ஐசிங், சிகை அலங்கார வகுப்புக்கள் 24-9-86 அன்று ஆரம்பமாகின்றன. விபரங்கள்: 10/5 சிவன் வீதி, திருநெல்வேலி, [சென்றல் நேர்சிங் கோமிற்கு பக்கத்தில் உள்ள ஒழுங்கையில்.] C 4711

### கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு 17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் 5 திலிருந்து O/L [A/L] சகல பாடங்களும் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். காலை 8-30க்குள் வீட்டிற் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு செய்யவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி ஒழுங்கை, சுண்டுக்குழி கிழக்கு C 4704

## சேவை

நவீன இயந்திரங்களின் உதவியுடன் 1 மணி நேரத்தில் கலர் பிலிம் சுருள்களை கழுவிக் கொடுக்கும் சேவையை ஆரம்பித்திருக்கின்றோம். அத்துடன் கறுப்பு-வெள்ளைப் புகைப் படங்களையும் உடனுக்குடன் பிரதி பண்ணிக் கொடுக்கப்படுகின்றது என்பதையும் தெரியப் படுத்துகின்றோம். குயிக் ஸ்ரார் கலர் சேவீஸ், 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4730

## தேவை

சிறிய 'Wood Planeing Machine' ஒன்று உடனே தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்: சி. குலம், 39, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். C 4712

சிங்கப்பூரில் பணிப்பெண்ணாக பணிபுரிய 35 வயதிற்குட்பட்ட பெண் உடனடியாகத் தேவை ஆங்கில அறிவு அவசியமில்லை, விரைவில் பிரயாணம்: த. துரைசிங்கம், 376B, நாவலர் வீதி, அரியாலை யாழ்ப்பாணம். C 4702

## தேவை

தையல் வேலையிலும் கட்டிங் வேலையிலும் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. தங்குவதற்கு இடவசதியும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: க. பூபாலசிங்கம் (சிங் கம் பற்றிக்) வன்னியசிங்கம் வீதி, தாவடி. C 4716

## வெறியாட்டு

சாவகச்சேரி, வெள்ளி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இம் மாதம் 27ம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் முருகையனின் வெறியாட்டு நாடகத்தினை மேடையேற்றவுள்ளனர்.

## எமது புதிய வெளியீடுகள்

(1) காலமெல்லாம் உன்மடியில்

★ முரளி ★ ஜெயஸ்ரீ [தரமானது]

(2) மைநாகம் (மலையாளம்)

★ சுகுமாரன் ★ மேனகா ★ ரவீந்திரன் (Thomson)

ஸ்னேக்கா வீடியோ மன்சில்
இல. 1, நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலி.

(C 4735)

## முக்கிய அறிவித்தல்

Jaffna Education Centre ல் நடைபெற்றுவந்த 87ம், 88ம் ஆண்டிற்கான G.A.Q, B.A வகுப்புக்கள்

உயர்கலைக் கல்லூரி
73, பருத்தித்துறை றேட்,
ஆனைப்பந்தியடி யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

[A1335] S. அருள்நங்கை.

## "மழலைகளின் சத்துணவும்-மன-உடல் வளர்ச்சியும்"

எனும் விடயம் பற்றிய

## கருத்தரங்கு

இடம்: மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு
காலம்: 21-09-86 ஞாயிற்றுக்கிழமை
காலை 8-00

கருத்துரை வழங்குவோர்:
குழந்தை வைத்திய நிபுணர் த. இராமதாஸ்
குழந்தை வைத்தியநிபுணர் கலாநிதி வாமதேவன்
மனோவைத்தியநிபுணர் கலாநிதி ஏ.செல்வரத்தினம்
மனோவைத்திய நிபுணர் கலாநிதி D.J. சோமசுந்தரம்

அனைவரையும், முக்கியமாக இளம் தாய்மார்களை அழைக்கிறோம்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்

[C 4676]

# HOTEL GNANAM'S

Under New Management

RELAX at BEER GARDEN

Chilled BEER with Spanish Omelette 30/-

★ ENJOY THE BEST CHINESE MEALES
★ HOT AND COOL DRINKS
★ LUNCH AND SHORT-EATS

A/C or non A/C Rooms Rs. 50/- to 200/-

Open: 7-30 a. m. to 11-30 p. m.

WHERE OUR STANDARDS ARE HIGH



HOTEL GNANAM'S

299, CLOCK TOWER ROAD, JAFFNA.
TELE: 22082, 23067.

[A-1346]

## மணிவாக்கு

தியானம் என்பது ஆன்மாவின் கண்ணடி அதன் வழியே மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிறான்.

— பிரெஞ்சுப் புலவன் லாவன்டைன்

## நமது நோக்கு

# பிரபல பாடசாலைகள்

பிரபல பாடசாலைகளுக்கு அனுமதிகோரி பெற்றோர் படையெடுக்கும் "சீசன்" தொடங்கி விட்டது. இதனை மட்டுப்படுத்த கல்வி அமைச்சு திட்டமிடுகிறது.

பிரபல பாடசாலையென்றால் நகர் மத்தியில் உள்ளது: நகரமென்றால் கொழும்பே அமைச்சின் கவனத்தில் தென்படுகிறது. றோயல், ஆனந்தா போன்ற கல்லூரிகள் 'பிரபலம்' என்ற பதத்துக்கு வரைவிலக்கணம். அலங்காரக் கட்டிடங்கள், படிப்புக்கும் விளையாட்டுக்குமேற்ற நவீனவசதிகள், தரமுடைய அதிபர், ஆசிரியர், பிரபுத்துவம் வாய்ந்த பழைய மாணவர் பரம்பரை- இவற்றைக் கொண்டே கல்லூரிகள் மதிப்படைகின்றன. பெற்றோர் இவற்றைத்தேடி அலைகின்றனர். பிள்ளைகளைச் சேர்க்க தவம் கிடக்கின்றனர்.

கொழும்பு, கண்டி, காலி போன்ற நகரங்களில் பிரபல பாடசாலைகள் உண்டு இன்றும் கொழும்பு நகரின் எல்லைப்புறங்களில் வளர்ச்சியுறும் பாடசாலைகள் இப்பட்டியலில் இடம் பெறும் வகையில் பிரபலம் பெற்று வருவதயும் கல்வி அமைச்சர் றனில் விக்கிரமசிங்கா கூறியிருக்கிறார்.

இன்று யாழ்ப்பாணமோ ஏனைய தமிழ் நகரங்களோ அரசின் கல்வி அகராதியில் தக்க இடம் பெற்றிருக்கவில்லை, தேசம், மக்கள், அபிவிருத்தி என்பதெல்லாம் சிங்கள இலங்கையைப் பற்றியதாக மாறிவிட்டன.

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகள் உண்டுயென்பதை யார் மறுப்பார்? அவற்றை இல்லாமற் செய்ய ஒருசதி உண்டா என நினைப்பதற்கு இடமுண்டு. இன்னும் விளக்கமாகக் கூறுவதானால் ஏனைய நகரங்களிலும் பார்க்க [கொழும்பு உட்பட] யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகள் அதிகமிருப்பபதாலேயே ஒரு போர் மூண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. அந்தப் போர் முடிவுக்குவர முடியாது திண்டாடுகிறது. இன்று மட்டக்களப்பை வெட்ட வெளியாக்குகிறது. தமிழ் மாநிலத்தில் கிழக்கு வெளிக்காமற் போய் விடுமா?

யாழ்ப்பாணத்தைத் தாக்கி வரும் ராணுவம் நகர் மத்தியில் உள்ள இரு பழைய பிரபல கல்லூரிகளை அடிக்கடி சீர்குலைத்து வருகிறது.

அகில இலங்கையிலும் யாழ் மத்திய கல்லூரியையும், வேம்படி மகளிர் கல்லூரியையும் கேள்விப்படாதவர் உண்டா. அகில உலகிலுமே இவ்விரண்டினால் இணைந்த குடும்பங்கள் பல சிறந்திருக்கின்றன.

அக்காலத்தில் வேம்படி என்றால் ஒரு பரந்த நாகரிக வாழ்க்கை முறையைக் குறித்தது. மத்திய கல்லூரி இளைஞன், மகளிர் கல்லூரிப் பெண்ணை அவசரப்பட்டு மணமுடிப்பதும் பின்பு விவாகரத்தைத் தேடி நீதிமன்றத்தை அணுகி அங்குள்ள வேப்ப நிழலில் நலிவுறுவதும் ஹாஸ்யமாக சொல்லப்பட்ட கதை.

இன்று இப் பிரபல பாடசாலைகள் இரண்டிற்கும், நீதிமன்றங்களுக்கும் யாழ் கோட்டை ராணுவம் காலனாக வந்திருக்கிறது. நீதிமன்றம் இடம் மாறினாலும், இப் பிரம்மாண்டமான ஸ்தாபனங்கள் நிலைகுலைவதா? யாழ்ப்பாணத்தின் வருங்காலத்தைப் பாதுகாக்கும் கோட்டைகள் இவை.

பிரபல கல்லூரிகள் யாழ். நகரில் மட்டுமல்ல, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி போன்றவை நாட்டுப்புறங்களில் பல உள. இலங்கையின் பிரபல கல்லூரிகளில் ஹாட்லி ஒன்றென்பதை பெற்றோர் நன்கு அறிவார்கள். ஆங்கிலத்தில் கல்வி கற்பித்த காலத்தில் சிங்களப் பெற்றோர் சிலர் இதுபோன்ற கல்லூரிகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பி இருந்தனர். முன்னாள் அமைச்சர் கே. பி. ரத்னாயக்கா ஹாட்லி பழைய மாணவன் என்பதில் இன்றும் பெருமை கொள்வது இதற்கு ஒரு உதாரணம்.

இன்று ஹாட்லிக் கல்லூரி என்ன நிலையிலிருக்கிறது? போர்க்களத்தில் ஒரு பகுதியாக மாறியது மாணவர்கள் ஊரின் மூலைமுடுக்குகளில் கல்வி பயில்கின்றனர். கட்டிடங்கள் மட்டுமல்ல பெரிய நூலகமும் எரிக்கப்பட்டது.

இந்த நெருக்கடியிலும் ஹாட்லி தலை நிமிர்ந்து நிற்பதால், எந்த நிலையிலும் தமிழரை அடிபணிய வைப்பது சாத்தியமாகாதென்பதற்கு ஒரு அறிகுறி.

யாழ்ப்பாணம் முற்ற வெளிக்கு முன் கம்பீரமாக அமைந்திருக்கும் யாழ். மத்திய கல்லூரியையும் அதன் அயலிலுள்ள வேம்படியையும் எந்த வகையிலும் இடமாற்றம் செய்வதில்லை என்ற முடிவை கல்லூரி நிர்வாகம் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. தவிர்க்க முடியாத முடிவு இது; தக்கதென்பதுங்கூட.

150 ஆண்டு பூர்த்தியான இப்பெரும் கல்வி ஸ்தாபனங்கள் யாழ். கோட்டையிலிருந்து அடிக்கடிவரும் ஷெல்லுக்கு அஞ்சி பரதேசம் போவதா?

அதேசமயம் பீரங்கிக்கும் குண்டுக்கும் பாரம்பரியப் பெருமை புரியாது என்பதால் இது மிகப் பொறுப்பு வாய்ந்த கேள்வி. தயக்கமின்றி விழிப்புடன் விடைதேட வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் இக் கலைச்செல்வங்களை ஓரிரவில் முடிவுகட்டலாமென்ற அச்சம், கோட்டையில் முகாமிட்டிருக்கும் ராணுவம் ஏற்படுத்துகிறது. தமிழ்மாணவரின் கல்விக்காக தம் உயிரைப் பணயம் வைக்கவா இராணுவம் அங்கு குடி கொண்டது?

ஏனைய (சிங்கள) நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் பாடசாலைகள் வளர்ச்சியடைகின்றன. வாழ்க்கையின் நிலையாமை என்ற பௌத்த கோட்பாட்டை இங்குதான் பரிசீலிப்பதா?

ஹாட்லியைப்போல், இவ்விரு கல்லூரிகளும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு வழி என்ன?

யாழ். கோட்டை ராணுவம் நினைத்தால் இக்கல்லூரிகள் நீதிமன்றங்கள் மட்டுமல்ல, யாழ் பெரியாஸ்பத்திரியையும் ஒருகை பார்க்கலாம்.

நெருப்பும் பஞ்சும் அக்கம் பக்கமாகவிருக்கின்றன. பஞ்சை எரிப்பது நெருப்பின் நோக்கமல்லவென்ற போதும், காற்றுக்கிளம்பி விட்டால் என்ன செய்ய முடியும்? இன்று காற்று மீண்டும் கிளம்பியிருக்கிறது.

காற்றை நிறுத்த எவராலும் முடியாது. பாடசாலைகள் இப்பகுதி மக்களுக்கு நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம், ராணுவ முகாம் வேறிடத்தைத்தேடுவதே ஒரே ஒருவழி.

# பாலஸ்தீனியரும் இலங்கைத் தமிழர்களும் ஒரு பன்முகப் பார்வை

மத்திய கிழக்கில் பாலஸ்தீனியரும் தென்கிழக்கு ஆசியாவில் இலங்கைத் தமிழர்களும் சந்தர்ப்பவசத்தால் தமது நல்வாழ்க்கையை இழந்துவிட்ட இரு இனங்கள். வந்த வரைவாழவைத்து அகதிகளாகிவிட்ட இந்த இரு இனங்களும் தம்மைத் தாமே ஆட்சி செய்த இனங்களே! இவர்கள் இன்று உலகம் முழுவதும் அகதிகளாக இருக்கின்றார்கள் என்றால் பாலஸ்தீனியர்போல் தமிழர்களும், தமிழர்கள் போலப் பாலஸ்தீனியர்களும் தீர்க்கதரிசனமற்ற அரசியற் பாதையிற் தவழ்ந்து வந்ததே காரணம்.

ஆடன் (Auden) என்பவர் ஒரு பாலஸ்தீன் கவிஞர். பாலஸ்தீன் மக்களை அவர் பாடுகின்றார்:

"அன்றொருநாள்
எமக்கொரு நாடிருந்தது;
அதை நியாயமானதென
நாம் எண்ணினோம்
உலகப் படத்தைக்
பார்த்திடுவாய்;
அதிலே தெரிந்திடுவாய்
அன்புக்குரியவனே!
அங்கு நாம்
இப்போது போகமுடியாது;
போகமுடியாது"

["Once we had a country;
and we thought it fair
Look in the atlas and
you find it there
Wecannot go there now
my dear we cannot go-
there now"]

இந்த நிலைமை இன்று தமிழ் மக்களுக்குமே. கோட்டையில் தமிழ் அரசர்கள் ஆட்சிசெய்ததுண்டு. கண்டியின் கடைசி அரசன் தமிழ் மகன் என்ற பெருமையும் எமக்குண்டு. அத்துடன் யாழ்ப்பாணமும், வன்னியும் இறைமைமிக்க அரசுகளாக இருந்தன என்பதற்கு ஆதாரங்களுமுண்டு. பாகியான் என்ற சீன யாத்திரீகன் இலங்கைக்குவந்தபோது புத்தளத்தில் அழகக்கோனார் என்ற தமிழ்ப் பிரதானி அங்கு அரசாண்டதாகக் குறிப்பிட்டுள்ளான். அவனுக்கு ஒரு கண் குருடென்றும அவன் எழுதிவைத்துள்ளான். சுருங்கச் சொன்னால் இறைமையை இழந்துவிட்ட எமது இனமும் தனது ஒற்றைக் கண் ஒன்றினை இழந்துவிட்ட நிலையிலேயே இருக்கின்றது. இந்த இரு இனங்களும் கடந்த காலத்தில் விட்ட பிழைகள் இறந்தகாலமாகவே இருக்கவேண்டியவை: எதிர்காலத்திற்கு வழிகாட்ட வல்லவை அல்ல!

பாலஸ்தீனியரும் தமிழர்களும் முக்கியமானவர்கள். யூதர்களின் குடிசனம் அதிகரிக்கவே 1936ல் இனக் கலவரம் ஆரம்பமானது பாலஸ்தீனத்திலே! பல யூதர்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள். இப்படு கொலைகள் நடந்தபோது

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**

ஹிட்லரின் நாஸிஸ ஆட்சிக்கு முன்பே பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இன்று பாலஸ்தீனத்தில் இருக்கும் பல குடியிருப்புக்கள் பாலஸ்தீனியர்களால் யூதர்கட்கு விற்கப்பட்டவை. பணத்தாசை கொண்டே இந்த நிலங்கள் யூதர்கட்கு விற்கப்பட்டன. ஆயினும் ஹிட்லரின் கெடுபிடியின் பின்பே லட்சக்கணக்கானோர் பாலஸ்தீனத்தில் நுழைந்தார்கள்.

பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றப் புள்ளிவிபரம் பின்வருமாறு:-

| ஆண்டு | பாலஸ்தீனத்தில் யூதர் |
|---|---|
| 1920 | 5514 பேர் |
| 1925 | 33 801 " |
| 1934 | 42,359 " |
| 1935 | 61,854 ". |

இக்காலகட்டத்தில் 13,66 518 ஆக இருந்தது. இருப்பினும் கட்டாயக் குடியேற்றத்தின் மூலம் யூதர்கள் நாட்டைப் பிடித்ததுமல்றிப் பாலஸ்தீனியர்களை அகதிகளாக்கியும்விட்டனர். இன்று யூதர்களின் குடித்தொகை 15 லட்சத்தைக் கடந்துவிட்டது. பாலஸ்தீனியர்களோ மேற்குலக வஞ்சனையால் அகதிகளாகிப் பல நாடுகளுக்கும் சென்று அகதிகள் முகாமிலேயே படுகொலைசெய்யப்படுகின்றனர்!

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் வடக்கும், கிழக்கும் தமிழர்களின் தாயகம். டொனமூர் அரசியற் திட்டம் 1931ல் கொண்டுவரப்பட்டபோதே இத்தாயகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது அந்தக் காலகட்டத்தில் 250 சிங்கள மக்களே கிழக்கிலே இருந்தனர். அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை மக்கள் ஒருசிலரே இருந்தனர். கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியான அம்பாறையில் இக்குடியேற்றம் எவ்வாறு வேகமாகப் பரவியது

இதன் புள்ளிவிபரம் இதோ:

பாலஸ்தீனத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர் மப்டி (Mufti) இக்கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவர லண்டனில் 1938ம் ஆண்டு ஒரு வட்டமேசை மகாநாடு கூடியது. இதில் பாலஸ்தீன நாடு பிரிட்டிஷ், யூத, பாலஸ்தீனம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட யோசனை சொல்லப்பட்டது. ஆயினும் அரபு உலகத்தின் செல்வாக்கு அதை முறியடித்தது. 1983ம் ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவர ஒரு வட்டமேசை மகாநாடு கொழும்பில் கூடியது: அது முடிவு எதுவுமற்ற கிழவிகள் மகாநாடாகக் கலைந்தது!

பல கட்சிகளை அமைத்து ஆளுக்கொரு மேடை அமைத்தவர்களிலும் இரு இனங்களும் சளைத்தவர்களல்ல! 1936ல் பாலஸ்தீனத்தில் ஆறு கட்சிகள் இருந்தன. அதில் முக்கியமானது மப்டிக் கட்சி Mufti's Party) இதன் தலைவரே மப்டி. இக்கட்சிகள் மூர்க்கத்தனமாக ஒன்றையொன்று எதிர்த்தன. மப்டி 1936 இனக் கலவரத்தில் தலைமறைவானதும் தேசிய பாதுகாப்புக் கட்சி (National Defence Party) பலம் பெற்றது இதன் தலைவர் றகேப் பே நாசாஷிபி (Raghep Bey Nashashibi) இவர் ஒரு மிதவாதி; காலத்தைக் கடத்துவதில் நியாயவாதிகளை மிஞ்சியவர். ஜெருசலேத்தின் மேயராகப் பதினைந்து வருடம் பதவி வகித்தவர். இவர்களின் ஒற்றுமையின்மை யூதர்களின் ஆக்கிரமிப்புக் குடியேற்றத்தைவளர்க்கக் காரணமானது

இலங்கையின் பெரும்பான்மைத் திட்டமிட்ட குடியேற்ற காலத்தில் இலங்கைத் தமிழர்

| | 1971 | 1981 | அதிகரிப்புவீதம் |
|---|---|---|---|
| சிங்களவர் | 82,280 | 1,46,371 | 778% |
| தமிழ் பேசும் முஸ்லிம்கள் | 1,27,308 | 1,61,754 | 27% |
| தமிழர்கள் | 62,290 | 78,315 | 25% |

1947ம் ஆண்டில் 1384பேராக இருந்த சிங்கள மக்கள் இன்று குடித்தொகையில் முஸ்லிம் குடிசனத் தொகைக்குச் சமமாக வளர்ந்து தமிழ் மக்களை மூன்றும் இடத்திற்குத் தள்ளியுள்ளார்கள்!

அம்பாறையைவிட்டுத் திருகோணமலையை ஒரு உதாரணத்துக்கு எடுப்போம். அங்கு சிங்கள மக்கள் குடியேறிய போது அவர்களிடம் அதிக பணம் பெற்றுக் கொண்டு தமிழ் மக்கள் தமது வீடுகளை அவர்கட்கு விற்றுள்ளார்கள். இது பாலஸ்தீன் மக்கள் பணத்திற்காகத் தமது நிலங்களை யூதர்கட்கு விற்றதையே நினைப்பூட்டும்!

வட்டமேசை மகாநாடு கூட்டி ஏமாற்றப்பட்டவர்களில் கள் பல கட்சிகளாகப் பிளவுபட்டு ஆளுக்கொரு கொடி பிடித்தனர் என்பதை மறக்க முடியாது.

பாலஸ்தீனத்தில் 'Jaffa' என்று ஒரு இடம் இருக்கின்றது இந்த இடத்திற்கே உலகிலுள்ள யூதர்களெல்லாம் முதலில் அகதிகளாக வந்தார்கள். வந்தவர்களில் எல்லோருமே திறமைசாலிகள். இப்போது அவர்களின் பிற்சந்ததியினர் சிலர் மொசாட்டுக்களாக JAFFNAவில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. JAFFA...வில் இருந்து JAFFNAவிற்கு இவர்களின் வருகை நல்ல மாற்றமல்லவென அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

## சிங்கள தேர்வு பரீட்சை:
# வடபகுதி ஊழியர் கொழும்புக்கு அழைப்பு

சுண்டுக்குளி, சனி

சிங்கள தேர்வு வாய்மொழி மூலப் பரீட்சைக்கு விண்ணப் பித்த அரச திணைக்கள ஊழி யர்கள் பலர் கொழும்புக்கு வருமாறு கடிதமூலம அழைக் கப்பட்டுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு விண் ணப்பித்த வட பகுதியைச் சேர்ந்த அரச திணைக்கள ஊழியர்களை இன்றும், நாளை யும் 22-ம் திகதியும் கொழும் பில் நடைபெறவிருக்கும் பரீட் சைக்குத் தோற்றுமாறு கேட் கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் நேற்று முனதினம் புறப்பட்டு பதற் றம் காரணமாக பளைக்கு அப் பால் செல்ல முடியாததினுல் திரும்பி வந்துள்ளனர். அநே கர் நேற்று மீண்டும் சென் றுள்ளதாக தெரிய வருகிறது. (இ)

## இணக்கசபை

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் வடக்கு இணக்க சபை பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்கள். தலைவர்: இ. இராசரத்தினம், உப தலை வர்: க. மார்க்கண்டு, செய லாளர்: செ. செல்வரத்தி னம், உபசெயலாளர்:சு.முத் துக்குமாரசாமி, பொருளா ளர்: யோ. ரட்ணராசா.

உறுப்பின்ர்களாக பின்வரு வோர் தெரிவு செய்யப்பட்ட னர். ச. வேலாயுதபிள்ளை, க. இ. குமாரசாமி, சி. வெ. சுப்பிரமணியம், சீ. க. சுப் பிரமணியம், அ. வேல்முருகு சி. நவரத்தினம், செ.சந்திர சேகரம், க. வேலாயுதபிள்ளை க.சின்னத்துரை, சு. சோதி லிங்கம். (இ)

## குண்டு சத்தங்கள்

(மாவிட்டபுரம்)

பலாலிஇராணுவமுகாம்பகுதி யில் நேற்று இடையிடையே பலத்த குண்டுச்சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது.

இப்பகுதியில் ஹெலிகொப் டர்,சிறிய விமானம் ஆகியவற் றின் ரோந்தும்இடையிடையே நடைபெற்று வருகிறது. (இ)

# வடபகுதி பரீட்சார்த்திகளுக்கு கொழும்பில் நேர்முகபரீட்சை

சுண்டுக்குளி, வெள்ளி

ஆசிரியர் பதவி எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றி அதிலிருந்து தெரிவு செய்யப் பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வடபகுதி இளைஞர்களையும். யுவதிகளையும் நேர்முகப்பரீட் சைக்காக கொழும்புக்கு வரு மாறு கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்படி பதவிக்கு விண் ணப்பித்து கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ருகலை, கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய இடங்களில் பரீசைக்கு அழைக்கப்பட்டு தெரிவு செய் யப்பட்டவர்களுக்கு இன்றிலி ருந்து வெவ்வேறு திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடை பெறவுள்ளது.

இவர்களை கடந்த 83,84,85 ஆகிய ஆண்டுகளுக்குரிய வாக் காளர் அட்டவணைப்பிரதி களையும் பெற்று வருமாறு பணித்திருப்பதனுல் இவற் றைப் பெறுவதற்காக யாழ். தேர்தல் அலுவலகத்தில் இப் பொழுது சில தினங்களாக கூட்டம் அதிகரித்துள்ளது. (இ)

## 3-வது பிறந்ததின வாழ்த்து



செல்வன் கோபி துரைசிங்கம்

ஏழாலை கிழக்கைச் சேர்ந்த துரைசிங்கம்- திரேசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோபி 20-09-86 (இன்று) தனது மூன்ருவது பிறந்தநாளை கொண்டாடுகிருர். இவரை ஓமானிலிருக்கும் அப்பா, அம்மா, அப் பப்பா, அப்பம்மா, பெரி யத்தை குடும்பத்தினர், பெரியப்பா குடும்பத்தி னர், சித்தப்பா குடும்பத் தினர், அத்தை குடும்பத் தினர், ஜேர்மனியைச் சேர்ந்த திருச்சித்தப்பா, சிறீசித்தப்பா, பாசுச்சித் தப்பா வவா அத்தை, உற்ருர், உறவினர்கள் ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகி ருர்கள். (C 4693)

### வவனியா மாவட்ட
# தமிழ் பாடசாலைகளுக்கான ஆங்கில மொழிப் போட்டிகள்

வவனியா, வெள்ளி

வவனியா மாவட்ட ஆங் கில மொழி போட்டிகள் இம் மாதம் 25, 26, 27 திகதி களில் நடைபெறவுள்ளது.

25-ம் திகதி நடைபெற வுள்ள வவனியா தமிழ் வட் டார பாடசாலைகளுக்கிடையி லான போட்டிகள் வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை யிலும், 26-ம் திகதி நடை பெறவுள்ள செட்டிகுளம் வட் டார போட்டிகள் பூவரசன் குளம் மகாவித்தியாலயத்தி லும் புளியங்குளம் வட்டார பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் 27-ம் திகதி புளி யங்குளம் பாடசாலையிலும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. [வா]

### கூட்டுறவு இயக்கத்தின்
# 75 ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாட ஏற்பாடு

மாவிட்டபுரம் வெள்ளி

கூட்டுறவு இயக்கத்தின் 75 ஆவதுஆண்டு பூர்த்திவிழாவை சிறப்பாகக் கொண்டாடயாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் கூட்டாக நட வடிக்கை எடுத்துள்ளன.

இவ்விழாவை கொண்டாடு வதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ள குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு தேசிய கூட்டுற வுச் சபைத்தலைவர் திரு எஸ். சிவமகராசா தலைமையில் இக் குழு செயல்பட்டு வருகிறது.

மக்களின் சமூக, கலாசார, பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு குறித்து நூல் ஒன்றை வெளியிடவும் கூட்டுறவும்அபிவிருத்தியும்என் னும்தலைப்பில் கருத்தரங்குகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்கள் மட்டு மன்றி ஏனைய கூட்டு றவுச் சங்கங்களும் இவ் விழா வை சிறப்பாக கொண் டாட நடவடிக்கை எடுத்துள் ளன. (ஊ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வியாபாரிகளுக்கு
ஓர் அறிவித்தல்!
"சங்கு மார்க்" எவர்சில்வர் பாத்திரங்களை மொத்தமாகவும் மிகவும் கூடிய விலைக்கழிவுடனும் பெற்றுக்கொள்ள ஒரே ஒரு ஸ்தாபனம்
செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்,
இல. 118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
(A 1343)

A/L 87 NEW CLASSES
சனி/ ஞாயிறு பிரிவு (Weekend Class)
இன்று ஆரம்பம்
சடப்பொருளியல்—8-30 — திரு. மணியம் B. Sc.
பொறியியல் —9-30 — திரு. மணியம் B. Sc.
நிலை மின்னியல் —11-30— திரு. மணியம் B. Sc.
இரசாயனம் — by யூ. மணியம் B. Sc.
காபன் இரசாயனம் 9-30 — 10-30
அடிப்படை இரசாயனம் 12-30—1-30
App. and Pure புதிய பிரிவு ஆரம்பம்
ஆசிரியர் வெக்டர் வேலாயுதம் B. Sc.
A/L 88
பௌதிகம் By மணியம்
விசைகள் (இன்று ஆரம்பம்) 10-30
பொறியியல் (இன்று ஆரம்பம்) 12-30
விபரங்கட்கு:
New Science Academy
B. M. C.க்கு முன்பாக, யாழ்ப்பாணம்.
Day Class 2ம் பிரிவு ஆரம்பம் 22-09-86.
(A 1342)

உங்கள் அன்புக்குரியவருடன்
நொடிப் பொழுதில் கதைத்து மகிழ
யாழ். கச்சேரியடியில்
24 மணி நேர
உள்நாட்டு-வெளிநாட்டு
ரெலிபோன் ரெலக்ஸ்
சேவைபுரிகின்றனர்
எபனி ஸ்தாபனத்தினர்
★ பாதுகாப்பான சூழல்
★ அமைதியான இடம்
★ அன்பான உபசரிப்பு
★ தெளிவான தொனி
★ தனியான அறை
இத்தனைக்கும்
குறைந்த கட்டணமே.
"ஈழக்களின் தேவை
எபனியின் சேவை"
EBANEE
Communication & Travels
(கச்சேரி பஸ் நிலைய முன்பாக)
A. R. கட்டிடம்,
10, கச்சேரி—நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்:- 24844, 24845
(A 1307)

வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பணயக் கைதிகளை மீட்க நவீன ரக ஆயுதங்களுடன் போராடும்
The Hostage
(Adults only)

லிடோ
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
பிரபு - நளினி நடித்த
புதிய வெளியீடு
கலர்
நியாயம்

LEARNER'S ENGLISH
லேணேர்ஸ் இங்கிலிஷ்
நீங்கள் ஆங்கிலம் படிக்கிறீர்களா?
உங்களுக்கு உதவிசெய்யவென்றே இந்நூல் வெளிவந்திருக்கிறது.
தமிழில் இத்தகைய நூல் இதுவரை வெளிவரவில்லை.
இது ஒரு 'வரதர் வெளியீடு'
143 பக்கங்களை கொண்ட இந்நூலை ஆங்கிலம் தெரிந்த ஒருவரின் உதவியுடன் கற்றுத் தேறுவீர்களேயானுல் ஆங்கிலத்தில் எழுதவும், பேசவும், வாசிக்கவும், உங்களுக்கு நல்ல ஆற்றல் ஏற்படுவது நிச்சயம்.
க. பொ. த.சாதாரண பரீட்சைக்குரிய பகுதிகள் யாவும் இதில் அடங்கியிருப்பதால் மாணவர்கள் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்திபெற இந்நூல் உதவிபுரிகிறது.
விலை ரூபா 16/-
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
(A-1290)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

WILFRED DHARMARANJAN LAWRENCE (SONNA)

பிறப்பு: 14-07-1944

இறப்பு: 20-09-1983

நீங்கள் அணைந்து ஆண்டு மூன்று ஆகிவிட்டாலும், கால நீரோட்டம் கருகி மறைந்தாலும் எம் இதயங்களில் ஏற்றி வைத்த அன்பெனும் சுடர் என்றும் ஒளி வீசியவாறே இருக்கும். இறைவனுடன் ஒன்றிவிட்ட உத்தமரே, எம் கண்ணீர் மலர்களை உதிர்த்துக் காணிக்கையாக்குகிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மம்மி, டடி,
சகோதரிமார்,
சகோதரன்.

106, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

C 4679

## அம்பாறை மாவட்ட தமிழ் விவசாயிகள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், சனி

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் விவசாயிகள் விவசாயத்திலீடுபட முடியாதவர்களாக இடம் பெயர்த்து அயல் மாவட்டங்களுக்குச் செல்கிறார்கள்.

விவசாயத்திலீடுபடும் விவசாயிகள் மீது இராணுவம் தாக்குதல் நடத்துவதாலும், அவர்களைக் கைது செய்வதாலும் அங்குள்ள விவசாயிகள் விவசாயத்திலீடுபட பயப்படுகிறார்கள்.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டால் மட்டுமே அம்பாறை மக்கள் விவசாயம்செய்யமுடியும்

அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென பிரஜைகள் இணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. [ச]

## பயறு, உளுந்து பயிரிட தமிழ் விவசாயிகளுக்கு அரசு உதவவேண்டும்

யாழ்ப்பாணம், சனி


வவனியா, செட்டிக்குளம் பகுதிகளில் உழுந்து, பயறு பயிரிடுவதற்கான காலமாதலால் இப்பகுதியிலிருந்து வன்செயல்களால் இடம்பெயர்ந்து சென்ற இப்பகுதி மக்களை மீண்டும் இப்பகுதியில் வந்து குடியிருப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் அரசாங்கம் உதவவேண்டும்.

இவ்வாறுபிரஜைகள் இணைப்புக்குழு அரசிடம் கேட்டுள்ளது.

வவனியா, செட்டிக்குளம் பகுதிகளில் விவசாயத்திலீடுபடும் மக்கள் தமது விவசாய நிலையங்களை இரவு நேரங்களில் ஒழித்துவந்து பார்த்துப் போகும் நிலையிலேயே இருக்கின்றனர் என்றும் இந்த நிலைமை மாறவேண்டுமென்றும், பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் வவனியா நகரத்தில் தமிழ் வியாபாரிகளின் தொகை குறைந்துவிட்டது. வவனியாவைச் சூழவுள்ள தமிழ் கிராமங்களிலிருந்து தமது உற்பத்திப்பொருட்களை நகரத்துக் எடுத்து வந்து விற்பனைசெய்வதற்கு தமிழ் மக்கள் பயப்படுகிறார்கள். இராணுவத்தின் நடமாட்டமே இதற்குக் காரணமாக உள்ளது. எனவே, வியாபாரிகள் நகரத்திற்குவந்து வியாபாரத்திலீடுபட அரசு உதவி செய்யவேண்டுமெனவும், சிங்கள வியாபாரிகளுக்கு காட்டப்படும் சலுகைகள தமிழ் வியாபாரிகளுக்கும் காட்டப்பட வேண்டும் எனவும் பிரஜைகள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். [ச]

## 2-வது ஆண்டு ஞாபக ஆராதனை



ஆர். ரி. செல்லத்துரை
(நல்லாயன்)

மண்ணில்:
10-11-1928

கிறீஸ்துவுக்குள்:
21-09-1984

கர்த்தரின் வழியில் நடந்து அவருக்குள் நித்திரை அடைந்தாலும், உமது வழியில் நாங்களும் நடந்து கிறீஸ்துவுடன் உம்மைத் தரிசிக்கும் நாளை எதிர்பார்க்கிறோம்.

தம்பசிட்டி, பருத்தித்துறையிலிருக்கும் பெந்தெகொஸ்தே சபையில் ஞாயிறு காலை 9 மணிக்கு ஆராதனை நடைபெறும்.

மனைவி, பிள்ளைகள்.

நல்லாயன்ஸ்
அல்வாய் வடக்கு,
அல்வாய். C 4723

## யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்திற்கு பெரும் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. வாழைப்பழத்தின் விலையும் இருமடங்காக அதிகரித்துள்ளது.

வாழைப்பழம் முன்பு ஒரு கிலோ 4 ரூபா முதல் 5 ரூபா வரை விற்கப்பட்டது. ஆனால் தற்பொழுது ஒரு கிலோ வாழைப்பழம் 10 ரூபா முதல் 12 ரூபா வரை விற்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் வாழைப் பழத்தின் விலை அதிகரிப்புக்கும், தட்டுப்பாட்டுக்கும் காரணம் யாழ்ப்பாணத்து வாழைப் பழங்களுக்கு கொழும்பு மற்றும் தென்பகுதிகளில் பெரும் கிராக்கிஏற்பட்டுள்ளதேஎனத் தெரியவருகிறது.

இதனால்தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து ஏராளமான லொறிகளில் வாழைப்பழங்கள் தென்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது எனவும் தெரிகிறது. (ச)

## உதவி அரச அதிபர் விஜயம்

வவனியா, வெள்ளி

கனிளிக்குளம் மகா இறம்பைக்குளம் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு உதவி அரச அதிபர் கே. ஐயம்பிள்ளை, சர்வோதய பிரமுகர்களுடன் மேற்படி பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. ரேவதனும இவருடன் சென்றிருந்தார். (வா)

## முதலாண்டு நினைவஞ்சலி



தோழர்
சந்ததியார்
(வசந்தன்)

இவன் அழிக்கப்படவில்லை ஆக்கப்படுகிறான்

ஆக்கம்: 25-08-1951

அழிப்பு: 19-09-85

கொன்றனர் அவனை
ஆயிரம் தடவைகள்
கொன்றனர் அவனை
ஆயிரம் தடவைகள்
மீண்டும் மீண்டும்
அவனைக் கொன்றனர்
மீண்டும் மீண்டும்
அவனைக் கொன்றனர்

பனிபடர் மலைகளிலும் பாலைவனங்களிலும் மாட மாளிகைகள் நிறைந்த இடங்களிலும் கொன்றனர் அவனை ஆயிரம் தடவைகள், ஆனால் அவனோ உயிரோடிருக்கின்றான், ஆனால் அவனோ உயிர் பெற்றெழுகின்றான்

எங்கு எதிரிகள் வீழ்த்தப்படுகின்றனரோ எங்கு எதிரிகள் புறம் ஒதுக்குகின்றனரோ எங்கு எதிரிகள் இருக்கின்றனரோ, அங்கு நீங்கள் அவனைக் காணலாம், அங்கு அவனது சுவடுகளைக் காணலாம்.

கண்ணீரை முடித்து விடாதீர்கள் அதற்கு தேவை இருக்கு.

[பலஸ்தீனக் கவிதை]

இவரது நினைவு தினம் 18-9-86-ல் கொண்டாடப்பட்டது.

உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

C 4719


## அரையாண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னம்பலம்
குகதாஸ்

ஆண்டவன் படைப்பு:
05-03-1959

அரக்கர் அழிப்பு:
20-03-1986



அமரர்
பொன்னம்பலம்
வைத்தீஸ்வரன்

ஆண்டவன் படைப்பு:
03-06-1965

அரக்கர் அழிப்பு:
20-03-1986

சாதனைகள் பலசெய்து சுகவாழ்வை எமக்களித்தீர்
வேதனையில் நாம்மூழ்க விண்ணுலகு சென்றுவிட்டீர்
மாதங்கள் ஆறானலும் மாறவில்லை நம்துயரம்
வேதனைக் கீதங்கள் நாம்வேகுமட்டும் ஓயாது.

அண்ணாவும் தம்பியும் அநியாயச் சாவாலே
மண்ணைவிட்டு மறைந்தாலும் எம்கண்ணைவிட்டு
மறையவில்லை
மனையைவிட்டுப் பிரிந்தாலும் எம்நினைவைவிட்டு
நீங்கவில்லை
எண்ணெய்நிறை விளக்காக எந்நாளும் ஒளிதருவீர்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

உற்றார், உறவினர்.

வட்டவளவு, இடைக்காடு,
அச்சுவேலி. (C 4514)

## சண்முகசுந்தரம் நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

முதுபெரும் எழுத்தாளர் அமரர் த. சண்முகசுந்தரம் நினைவஞ்சலிக்கூட்டம் வீமன்காமம் வித்தியாலயத்தில் நாளை காலை நடைபெறவுள்ளது. அதிபர் தி. மு. சிவராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல்கலைக்கழகத்துணைவேந்தர் சு. வித்தியானந்தன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி கோகிலா மகேந்திரன், திரு. நா. இராமலிங்கம், திரு. எஸ் திருச்செல்வம், திரு. இ. ஞானசுந்தரம், திரு. என். சண்முகலிங்கன், திரு. வேல்அமிர்தம், திரு. சகந்தசாமி, திரு. வி. வி. வைரமுத்து, கலாநிதி இ பாலசுந்தரம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

இக்கூட்டத்தில் அமரர் 'தசம்' எழுதிய 'யாழ்ப்பாணத்து மாட்டுவண் டிச் சவாரி' என்னும் நூல் வெளியீடும் நடைபெறும். இந்நூலின் முதற்பிரதியை லயன் பி. யோ. அன்ரனிப்பிள்ளை பெறுவார். நூல் அறிமுகஉரையை திரு க. கதிரமலையான் நிகழ்த்துவார்.

மாவைகலை இலக்கிய ஆர்வலரும் மகவம் மதிகலைஞர் வட்டமும் இணைந்தே இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளனர்.

## உரக்களஞ்சிய நிலையம்

இருப்பிட்டி வெள்ளி

நயினாதீவு விவசாய மக்களின் வசதி கருதி உரக்களஞ்சிய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி சென்ற ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்நிலையத்திற்கான வேலைகள் மூற்றாக முடிவடைந்துள்ளது. இந்நிலையம் அடுத்தமாதம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படும். [க]

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு.
இராசரத்தினம்
துரைசிங்கம்
(லேக்கவுஸ் முன்னாள் உதவி மனேஜர்)

மண்ணில்: 08-10-1932
விண்ணில்: 20-09-1983

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து பண்போடும், அன்போடும், பாசத்துடனும் எம்மைக் காத்து, குன்றாக் குலவிளக்காய் குதூகலத்தை எமக்களித்தாய். குமுறும் துயர் வெள்ளத்திலெமை அழுந்த விட்டுச் சென்றாய். மூன்றாண்டு நினைவுநாளில் துரையாரின் ஆத்மசாந்திக்கு நாம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால்
துயருறும்:
மனைவி, மகன், உற்றார்,
உறவினர், நண்பர்கள்,
நிலாவரை வீதி,
நவற்கிரி. (C 4762)

## கொடி தினம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் தேவைகளை நிறைவுசெய்ய உதவும் பொருட்டு சாவகச்சேரி நோயாளர் நலன்புரிச்சங்கத்தினர் இம் மாதம் 25ம் திகதி கொடித்தினம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இக் கொடித்தினம் மூலம் திரட்டப்படும் நிதி சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைநோயாளருக்கு இருப்பிடவசதி செய்தல் வார்ட்டுக்கள் புனரமைத்தல் முதலான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளதாக நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் எஸ். சின்னத்தம்பி தெரிவித்துள்ளார். [இ]

# சீன-பாக் அணுசக்தி ஒப்பந்தம்

## பிரதமர் ராஜீவ் கண்டனம்!

புதுடில்லி, செப். 19

**பாகிஸ்தான்-சீன அணுசக்தி உடன்படிக்கை குறித்து இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி கண்டனம் வெளியிட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் இந்திய உபகண்டத்துக்கு ஓர் அச்சுறுத்தலாத அமையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.**

கல்கத்தாவில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மகாநாட்டிலேயே திரு. ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியா பாகிஸ்தானின் அணுசக்தி நடவடிக்கைகள் குறித்து அடிக்கடி எச்சரித்து வந்ததாகவும் ஆனால் பாகிஸ்தான் இதனை அலட்சியம செய்துவந்ததாகவும் இந்தியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

திரு. ராஜீவ் காந்தி தொடர்ந்து கூறியதாவது: ''இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் பாகிஸ்தானியர்களின் ஊடுருவல்களும் கூடுதலாகக் காணப்படுகின்றன. இதனைத் தடுக்கும் வகையில் கடுமையான சட்டங்களை இந்தியா கொண்டுவரும். அத்துடன் அத்துமீறல்காரர்கள் மீதும் இந்திய அரசு விழிப்பாக இருந்து கடும் நடவடிக்கை எடுக்கும்'' என்றார்.

# உலகச் செய்திகள்

## தென்னாபிரிக்க விமானங்கள் ஜப்பானில் தரையிறங்கத் தடை

டோக்கியோ செப், 19

தென்னாபிரிக்க விமானங்கள் ஜப்பானில் இறங்குவதற்கு ஜப்பானிய அரசு தடை விதித்துள்ளது.

தென்னாபிரிக்கா மீது ஜப்பான் விதித்துள்ள மட்டுப்படுத்தப்பட பொருளாதாரத் தடையின் ஓரங்கமாகவே இது விளங்குகின்றது.

அத்துடன் ஜப்பானிய பயணிகளை தென்னாபிரிக்காவுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ளவேண்டாம் எனவும் ஜப்பான் கேட்டுள்ளது.

ஜப்பானிய அரச ஊழியர்களும் தென்னாபிரிக்க விமானங்களில் பயணஞ் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ஜப்பான் அறிவித்துள்ளது.

இதுதவிர சில தென்பிரிக்க பொருட்கள்மீதும் ஜப்பானிய அரசு இறக்குமதித் தடையை அறிவித்துள்ளது.

## ஷுல்ஸ் — செவட்நாட்ஸே சந்திப்பு

வாஷிங்டன் செப், 19

சோவியத் வெளியுறவுஅமைச்சர் செவட்நட்ஸே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு.ஜோர்ஜ் ஷுல்ஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வாஷிங்டனில் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும்நவம்பரில் சோவியத் தலைவர் கோபச்சேவ், அமெரிக்க அதிபர் றீகன் ஆகியோருக்கிடையிலே இடம் பெறவுள்ள உச்சி மகாநாடு குறித்து தீர்மானிக்கும் வகையிலேயே இந்தச் சந்தி இடம் பெறுகிறது.

சோவியத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அமெரிக்க பத்திரிகையாளர் நிக்கோலஸ் டானிலோவ் விடுதலை செய்யப்படாதவரை றீகன்-கோபச்சேவ் சந்திப்பு சாத்தியமில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அப்பத்திரிகையாளர் ஓர் உளவாளி என்று சோவியத் அமைச்சர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

கூடவே ஐ நா. விலிருந்து அமெரிக்காவினால் வெளியேற்றப்பட்டுள்ள 25 சோவியத் அதிகாரிகள் குறித்தும் சோவியத் அமைச்சர் செவட்நாட்ஸே கண்டனம் வெளியிட்டார்.

## பாலம் அமைக்க முயற்சி

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணைச் சந்தியிலிருந்து அராலிப் பாலம் வரை உள்ள அணைக்கட்டில் பற்றைகள் அகற்றப்பட்டும் தூகர்ந்துபோன இடங்களுக்கு மண் கொட்டியும் சிரமதானம் மூலம் சரவணைப் பிரஜைகள் குழுவினரால் திருத்தப்பட்டது. இச் சிரமதான முயற்சியில் ஆண்களும் பெண்களுமாக இருநூற்றுக்கு மேற்பட்டோர் பங்குபற்றினர்கள்.

பொதுமக்கள் மாரி காலத்தில் கஷ்டமின்றி பிரயாணம் செய்தவற்கேற்ற முறையில் பனைமரங்களால் 50 அடி நீளமான பாலம் ஒன்று அமைக்கும் முயற்சியும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. [க]

## கடன்வழங்கும் சங்கம்

நெல்லியடி, வெள்ளி

கரவெட்டி கிழக்குப் பகுதியில் வாழும் விவசாயிகளுக்கும், கோழி, கால் நடைப் பண்ணைத் தொழில்களில் ஈடுபடுவோருக்கும், குடிசைக் கைத்தொழிலாளருக்கும் நிதி உதவிவழங்கும் நோக்குடன் கரவெட்டி கிழக்கு பெலிய தோட்டம் விவசாயிகள் ஐக்கிய நாணயசங்கம் என்ற பெயரில் ஒருகடன் வழங்கும் ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளது. அதன் உத்தியோகத்தர் வருமாறு:

தலைவர் திரு.வீ. கே. தாமோதரம்பிள்ளை, உபதலைவர் திரு. கே. முருகேசு, செயலாளர் திரு. தா. பாலசிங்கம், உப செயலாளர் திரு. எஸ். சேனாதிபதி, பொருளாளர் திரு. கே விக்கினேஸ்வரராசா ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## அடையாளம் காணப்பட்டது

வவுனியா, வெள்ளி

ஓமந்தை இறம்பைக்குளம் சந்திமரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டப்பட்டிருந்த ஆணின் சடலம் மகிழம் குளத்தில் வசிக்கும் தச்சு வேலை செய்யும் சண்முகத்தினுடையது என அடையாளம் காணப்பட்டது. [இ]

## 10-வது 'ஆசியாட்'

பத்தாவது 'ஆசியாட்' [Asiad] பந்தயங்கள் தென்கொரியாவின் தலைநகரான ஸியோலில் இன்று ஆரம்பமாகின்றன. 28 ஆசியநாடுகள் இந்த பந்தயங்களில் பங்குகொள்கின்றன. 25 விளையாட்டுப் பந்தயங்கள் இத்தடவை ஆசியாட்டில் இடம்பெறுகின்றன.

1951-ம் ஆண்டில் 'ஆசியாட்' போட்டிகள் ஆரம்பமாகின. தொடர்ந்து கடந்த எட்டு வருடங்களாக இப்போட்டிகளில் ஜப்பானே கூடுதல் தங்கப்பதக்கங்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்து வந்தது.

ஆனால் 1982-ம் ஆண்டு புதுடில்லியில் இடம் பெற்ற 9-வது 'ஆசியாட்' பந்தயங்களில் நிலைமை மாறியது சீனா கூடுதல் தங்கப்பதக்கங்களைப் பெற்று ஜப்பானின் ஆதிக்கத்தை முறியடித்தது.

புதுடில்லியில் இடம்பெற்ற 9-வது 'ஆசியாட்' போட்டிகளில் 19 பந்தயங்களே இடம்பெற்றன. 196 தங்கப்பதக்கங்கள் மட்டுமே இவற்றுக்கு வழங்கப்பட்டன இதில் சீனா 61 பதக்கங்களையும், ஜப்பான் 57 பதக்கங்களையும், தென்கொரியா 28 பதக்கங்களையும் பெற்றன.

இத்தடவை 10-வது 'ஆசியாட்'டில் இடம்பெறவுள்ள 25 பந்தயங்களுக்கென 269 தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. புதுடில்லியில் வழங்கப்பட்டதை விட 73 பதக்கங்கள் இதில் கூடுதலாகவுள்ளன.

தென்கொரியாவில் ஸியோல்நகரில் 1988-ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்களுக்கென நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டரங்கில் 10-வது 'ஆசியாட்' இடம்பெறுகிறது.

தென்கொரிய விளையாட்டு அணியே கூடுதல் போட்டியாளர்களைக் கொண்டுள்ளது 495 பேர் இதில் அங்கம் பெறுகின்றனர். தொடர்ந்து ஜப்பான் 455 பேருடனும், சீனா 385 பேருடனும் பங்கேற்கின்றன.

இவற்றுடன் சேர்ந்து ஏனைய ஆசிய நாடுகளின் மொத்தம் 5,500 போட்டியாளர்கள் இப்பத்தாவது ஆசியாட்டில் பங்கேற்கின்றனர்.

பர்மா நிதிநெருக்கடி காரணமாகவும், புருணை தனதுநாட்டின் அரசர் காலமானதாலும் ஆசியாட் பந்தயங்களில் பங்குபற்றவில்லை.

ஆனால் வடகொரியா, வியட்நாம், லாவோஸ் கம்போடியா, வட தென்யேமன் ஆகியநாடுகள் அரசியல் காரணங்களுக்காக 10-வது ஆசியாட்டைப் பகிஷ்கரித்துள்ளன.

இன்று 20 ம் திகதி முதல் அக்டோபர் 5 ம் திகதி வரை ஆசியாட் பந்தயங்கள் இடம்பெறும்.

— றென்ஸி —

## கோட்டை முகாமை அகற்றக்கோரும் தீர்மானம்

மாவிட்டபுரம், வெள்ளி

''யாழ். நகர மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கோட்டை இராணுவ முகாமை உடனடியாக அகற்றி மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழியமைக்கவேண்டும்''

இவ்வாறு அரசாங்கத்தை கோரும் தீர்மானம்ஒன்று மல்லாகம் சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்தில் சங்கத்தலைவர் திரு அ. குமரகுரு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் அழிவு ஏற்படுத்தும் செயலை உடனடியாக நிறுத்துமாறு கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பிரயாண ஒழுங்குகள்

ஓமான்: ஆஸ்பத்திரி தாதிகள் (NURSES) கிளீனேஸ் ஆண்கள் இருவாரத்தில் பிரயாண ஒழுங்கு செய்யப்படும்.

அபுதாபி: பாம் தொழிலாளர்கள் மேசன் பிளம்பர் எலக்ரிசியன் போன்றோருக்கு உடன் பிரயாணம்.

ஈராக்: கட்டிடத்துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு நேரடிப்பிரயாணம்.

சவூதி: ஆஸ்பத்திரி ஆண் பெண் கிளீனேஸ், சவூதி கேற்றறிங் ஹோட்டல் தொழிலாள கள் (SAUDI CATERING)

பிரயாண ஒழுங்குகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு
R K. பரமசுவாமி
(பவானி)
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு.

C 4690

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

பிரயாண ஒழுங்குகள்

★ சிங்கப்பூர்: (கட்டிடப்பகுதி லேபறேஸ்)
★ சிங்கப்பூர்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (கவுஸ் மெயிட்ஸ்)
★ குவைத்: (பெண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆண் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வேலைவாய்ப்புப் பெற விரும்புவோர்?

உடனடியாக 7 படம், பாஸ்போட்
முதலிய ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றின்
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக,
ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1338)

# "வெளிவாரிப் பரீட்சைகளை யாழ். மாவட்டத்தில் நடத்த ஆலோசிக்கப்படுகிறது"

## மான்யங்கள் ஆணைக்குழுவின் செயலர்

யாழ்ப்பாணம், சனி

''யாழ்.மாவட்டத்தில் இருந்து பதிவுசெய்யப்பட்டமாணவர்களுக்கான வெளிவாரி பட்டப்படிப்புப் பரீட்சைகளை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கான ஆலோசனைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. இது பற்றிவிரைவில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும்''.

இவ்வாறு யாழ்.வெளிவாரி மாணவர் ஒன்றியத்தினரால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிபட்டப் படிப் படிப்புக்கிளை பதிவாளருக்கு அனுப்பப்பட்ட மகஜருக்கு,, பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுப்பப்பட்ட கடிதமொன்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வெளிவாரிப் பரீட்சைகளை கொழும்பு, கண்டி மாவட்டங்களில் நடத்துவதில் யாழ். மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகளை விளக்குமுகமாக வெளிவாரிமாணவர் ஒன்றியத்தினரால் இம்மகஜர் பதிவாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இப்பரீட்சைகளை யாழ்.மாவட்டத்தில் நடத்துமாறும் மகஜரில் கோரிக்கை விடப்பட்டது. இதன்பிரதிகள் அமைச்சர் தொண்டமான், பேராதனை பல்கலைக்கழக உப-வேந்தர், கலாநிதி ஸ்டான்லி கல்பகோ, எம். எஸ். செல்லச்சாமி, யாழ்.பல்கலைக்கழக உப-வேந்தர், இலங்கை ஆசிரியர்சங்கத்தின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன. ஜனாதிபதிக்குஅனுப்பப்பட்டபிரதி இதே வேளை இம்மகஜரில் அடங்கியுள்ள கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்குமுகமாக உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளரினால் வெளிவாரி மாணவர் ஒன்றியத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

# புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

சிந்தாமணிப் பிள்ளையார் ஐக்கிய நாணய சங்கத்தில் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த தலைமைக் காரியாலயம் பரிசோதகர் க. நல்லைநாதன், கூட்டுறவு உத்தியோகத்தர் ஞா. கேதீஸ்வரன் ஆகியோர் ஐக்கிய சங்கங்களின் வளர்ச்சிபற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். அத்துடன் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜ நிர்வாகச் செயலாளர் லோ. வாகிசன் பொருளாளர் ரீ. சீவரத்தினம் ஆகியோர் சமாஜத்தால் வழங்கப்படும் கடன் திட்டங்கள் பற்றி விளக்கமளித்தார்கள்.

புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் இ. கோபாலக்கிருஷ்ணன், உப தலைவர் சி. லோகநாதன், செயலாளர் செ. முருகானந்தன், உப செயலாளர் செல்வி க. சரோஜா, பொருளாளர் சோ. முத்துராசா, நிர்வாக சபை உறுப்பினர்கள் கா. சற்குணம், ப. கருணாகரன், திருமதி. ச. தேவவதனா, திருமதி செ. சித்திரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

0 0 0

யாழ்ப்பாணம், சனி

யாழ் பெரியபுலம் மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் சி. சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. சிவபாலசிங்கம், உப தலைவர் த. கதிர்காமநாதன், செ. குமாரவேல், ரி. எஸ். லோகநாதன், உப செயலாளர் துரை சண்முகராசா பொருளாளர் செ. பொன்னம்பலம். நிர்வாகசபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

நயினாதீவு, வெள்ளி

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிட்ட வித்தியாசாலைபழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ப. க. காமாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பின் வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் அ, சதானந்தன், செயலாளர் இ. லோகநாதன், உப தலைவர் சோ. சந்திரசேகரம், உப செயலாளர் உ. முகம்மது முகைதின் நிர்வாக சபை உறுப்பினர்களாக பத்து பேர் தெரிவு செய்யப்பட்டனர்

0 0 0

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் மத்திய விழிப்பு மன்றத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் சோதிவேம்படிப் பாடசாலை மண்டபத்தில் திரு. இரா லோகநாதன் தலைமையில் நடைபெற்ற போது நடப்பு வருட நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் திரு ந. விவேகானந்தராசா, உப தலைவர் திரு க. சிற்றம்பலம், செயலர் திரு அ. மு. அருணாசலம் ஐவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பட்டது. (வா)

0 0 0

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு புனித பிரான்சீஸ் சவேரியார் சன சமூக நிலையப் பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் வி. லீனஸ் தலைமையில் தும்புத் தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் நிலையத்தின் நிர்வாகத்திற்கு கீழ் இயங்கி வரும் சென் சேவியர் விளையாட்டுக்கழகத்தை செயல் படுத்தும் நோக்குடன் சன சமூக நிலைய உறுப்பினரால் பின்வருவோர் விளையாட்டுக்கழக உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் வெ. செபமாலை, செயலாளர் வி. அமிர்தவாசம் நிர்வாக சபை யா. ஞானசீலன், தோ. திருஞானம், ரா. ராமச்சந்திரன், ம. லீயோன், வெ. அருந்தவநேசன்.

0 0 0

யாழ்ப்பாணம், சனி

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தின் நடப்பு வருட பரிபாலன சபை உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டார்கள். தலைவர் ஏ. சி. வேலாயுதபிள்ளை, உப தலைவர்கள் நா. நித்தியானந்தன், பொ. நடராஜா, செயலாளர் க. துளசிமணி, உப செயலாளர் சு. பரமேஸ்வரன், பொருளாளர் பொ. பத்மநாதன், உப பொருளாளர் க. குமணன். கணக்காய்வாளர் இ. பிரபாகரன் நான்கு பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஒ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் சனி

மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்திருப் பணிச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஆலய முன்றலில் நிகழவுள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி



இராமு. தர்மகுலசிங்கம்

[பிள்ளையார்]

பிறப்பு: 20-12-1948

இறப்பு: 20-9-1985

ஓராண்டு கணப் பொழுதாய் மறைந்ததிங்கே. எம்முயிரே தவப்பயனே அன்பின் ஊற்றே சீராண்டு நாம்வாழ உதிரம் சிந்திப் சேவைநலம் புரிந்துயர்ந்த அமுதச் செல்வா. நீராண்ட கண்களுடன் நெஞ்சம் வெந்து நிர்க்கதியாய் நிற்கின்றோம். நிருமலன் தாள் ஓராண்டு விண்ணுலகில் இருப்பீர் எங்கள் இதயத்திற் சாந்தி ஒளி நிறைப்பீர் ஐயா.

தங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், தாயார், தங்கைமார், அண்ணன்மார், மாமா, மாமி, மைத்துனர்கள், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள். ஓராண்டு நினைவுத் திதி: 9-10-86ல் நடைபெறும். இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

15, கற்குள ஒழுங்கை,
முஸ்லிம்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

[C 4724]

## இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
திகதி- 4 (20-9-86)
கிழமை- சனி
திதி- துதியை
நட்சத்திரம்- ரேவதி

மேடம்- குடும்ப வாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும். மதிப்பு உயரும். தொழில் சிறப்புண்டாம்.

இடபம்- தப்பான பாதையில் இழுத்துச் செல்லப்படுவீர்கள். சிந்தையில் தடுமாற்றம் தென்படும். குடும்பப் பிரச்னைகளும் மேலோங்கி நிற்கும்.

மிதுனம்- மாதுரு வழியாலும் மகிழ்ச்சியுண்டு. மனைச் சிறப்புண்டு. விளைபொருள் விருத்தியுடன் விருத்திற்கிடமுண்டு.

கடகம்- புத்திரர் சுகமுமுண்டு. புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். கடமையிலும் கண்ணியம் பிறக்கும்.

சிங்கம்- திடீர்த் தாக்குதலால் பாதிக்கப்படுவீர்கள். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும். வாழ்க்கையில் அரசபயத்திற்குமிடமுண்டு.

கன்னி- தாம்பத்திய வாழ்வும் கிட்டும். தனதானிய விருத்தியுண்டு. காதலர்களும் இணைவர். பொன்னான நாள்.

துலாம்- பண விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தவும். எதிரிகளின் சூழ்ச்சிகளில் பாதிக்கப்படுவீர். பலமாக இருக்கும் தொழிலிலும் பாதிப்பு ஏற்படும்.

விருச்சிகம்- குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கும். குறுக்கு வழிகளிலும் பணம் கிடைக்கலாம். தொழில் முன்னேற்றமுண்டு.

தனுசு- தூரத்துப் பயணம் நன்மை தரலாம். உறவுமுறைகளில் முன்னேற்றம் காணப்படும். பூமியால் லாபமுமுண்டு.

மகரம்- புதிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உகந்ததினம். இரு தொழில் வாய்ப்புண்டு. குடும்ப சந்தோசமுண்டு.

கும்பம்- தென்றலும் தீயாக மாறும். தொழிலில் சிக்கல்கள் தோன்றும். உற்சாகமாக இருக்கவும்.

மீனம்- மனப்போராட்டம் அதிகரிக்கும். ஆசைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. எவ்விடயத்தையும் நன்கு ஆலோசித்து செயல் படுத்தவும்.

திருமலை வே. ரவீந்திரன்

## மொஸ்கோ பயணம்



யாழ்ப்பாணம், வெள்ளி

நீர்வேலியைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் திரு. சின்னையா இராசையா ரஷ்யா அரசின் அழைப்பின் பேரில் மொஸ்கோவில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளப் பயணமானார்.

## பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், சனி.

கைதடி கிழக்கு சனசமூக நிலையப் பாலர் பாடசாலைப் புதிய கட்டிடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் நிலையத்தலைவர் திரு. மு. சே. இராசையா தலைமையில் நடைபெறவுள்ளது.

கௌரவ விருந்தினர் திரு. க. தம்பிப்பிள்ளை, போஷகர் திரு. சு. பரமேஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கேற்ற, பிரதம விருந்தினர் திரு. ச. நமசிவாயம் பாலர் பாடசாலைப் புதிய கட்டிடத்தைத் திறந்துவைப்பார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அபிவிருத்திச் சபை கைதடி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தி உத்தியோகத்தர் திரு. செ. தங்கராசா யா. கைதடி விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. க. நடராசா, கைதடி சைவக் சிறுர் இல்ல நிர்வாகச் செயலாளர் திரு ஆ. சுந்தையா ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். திறப்பு விழாவை குறிக்கும் முகமாக மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

ENJOY

Delicious Hot and Cold Snacks

Fruit Drink, Cakes, Ice Cream and Mouth watering Chinese Meals



(Chopsuey, or fried Noodles)

at reasonable rate

Visit:

GREEN PEKING PALACE

69G, 4th CROSS STREET, (சின்னக்கடை Market முன்பாக) JAFFNA.
TELEPHONE: 24085, 23873

| | | | |
|---|---|---|---|
| Take Away | LUNCH PARCEL | — | 14/- |
| ,, | BURIYANI CHICKEN | — | 20/- |
| ,, | CHINESE FRIED RICE | — | 16/50 |
| | NOODLES | — | 18/00 |
| SPECIAL DINNER- | | | |
| SOUPMAIN | MEALS-DESERT | — | 37/50 |

Where our standards are High. [A 1345]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 20-9-86

### புலிகளின் பயிற்சிபெற்ற கமாண்டோ வீரர்கள்

## கவச, பீரங்கி, கனரக வாகனங்களில்

# வல்வைவீதியால் அணிவகுப்புபவனி

### ஆயிரக்கணக்கான மக்கள் கரகோஷம் செய்து வாழ்த்து

வல்வெட்டித்துறை, வெள்ளி தமது கொமாண்டோ பயிற்சியினை முடித்துக் கொண்டு வெளியேறிய விடுதலைப்புலிகளின் சுமார் 150 வீரர்கள் நேற்றைய தினம் மாலையில் நடைபவனியாக வல்வை பகுதியில் வீதியால் வந்ததை, தெருமருங்கிலும் நின்று ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து 'புலிகளேவாழ்க!' வெல்க தமிழீழம் என்று கரகோஷம் செய்து வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

பாரிய கவசவாகனம் ஆர்ட்டிலறி ஷெல் பீரங்கி இழுப்பு வாகனம், உட்பட சுமார் 9 வாகனங்களிலும் பயிற்சி பெற்ற நூற்றுக்குமதிகமான, ஏற்கனவே பயிற்சியை முடித்துக்கொண்ட 'கொமாண்டோ வீரர்களும் இப்பவனியில் வந்தனர்.

இவ்வீரர்கள் நடைபவனியாக வந்தபொழுது தமது பயிற்சித் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் பலவித பாதுகாப்பு செயல்களை செய்த வண்ணம் வீதிகளில் சென்ற காட்சிகளையும், வாகனங்களில் பூட்டப்பட்ட 'பிப்றி கலிபர்' ஜி பீ. எம். போன்ற பலரக ஆயுதங்களையும் 'ஷெல்' ஏவு குழாய்கள் முதலானவற்றையும் சகல மக்களும் பார்த்து வீரர்களுக்கு மேன்மேலும் உற்சாகத்தையும், தங்கள் வரவேற்பு ஆதரவுகளையும் காட்டி கோஷமிட்டனர்.

அவர்களது பயிற்சிக்கு ஒத்திகை பார்க்கும் வகையில், அரச படையினரின் 3 ஹெலிக் கொப்டர்கள் வல்வைப் பகுதியை வட்டமிட்டன. உடனே பவனிவந்த வாகனங்கள் நடுரோட்டிலேயே நிறுத்தப்பட்டு, வீரர்கள் தத்தமது போர்நிலைப் பாணியில் சகல கட்டடங்களிலும் நின்றுகொண்டனர்.

ஹெலிகொப்டர்களைத் தாக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

'பிப்றி கலிபர்', ஜி. பி எம். 'றம்போ' 'ஸ்னைப்பர்'போன்ற பலரக ஆயுதங்களுடன் வீரர்கள் தெருவின் பல இடங்களிலும் நின்று மூன்று ஹெலிகொப்டர்களைக் குறிபார்த்த வண்ணம் தாக்குதலுக்குஆயத்தமாக சுமார் 25 நிமிடங்கள் காத்துநின்றனர். ஆனல்வட்டமிட்ட ஹெலிகொப்டர்கள் இன்னும் மேலே உயர்ந்து சிறிது நேரம் அப்பகுதியை சுற்றி வட்டமிட்டு, நோட்டமிட்டபின் மேற்குத்திசை நோக்கிப்பறந்து சென்றன.

குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வீரர்களுசகு உற்சாகத்தை அளித்தவண்ணம் அவர்களைச் சூழ்ந்து நின்றுகொண்டு இவற்றையெல்லாம் பார்த்தனர்.

'ஹெலி'கள் சென்றபின் மீண்டும் நடைபவனி தொடர்ந்து வல்வை சந்தியில் கொமாண்டோவீரர்கள் அணிவகுத்து நின்று மக்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன் பின்னர் வாகனங்களில் ஏறித் தமது பாசறைகளுக்குத் திரும்பினர். [கே]

---

## ஜனதிபதியின் சோவியத் விஜயம்

கொழும்பு, வெள்ளி அண்மையில் சோவியத் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிராந்தியத் தலைவர் ஏ. ஐ. வல்கோப் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது ஜனதிபதி ஜயவர்தனவின் சோவியத்பற்றி ஆராயப்பட்டு அடுத்த வருட நடுப்பகுதியில் அவ்விஜயத்தை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மே மாதத்தில் ஜனதிபதி ஜயவர்த்தன சோவியத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ள விருந்து பின்பு அது பின் போடப்பட்டது

## இராணுவத்தினர் காயம்

வல்வெட்டித்துறை, வெள் வல்வெட்டித்துறை இராணுவ முகாமின் கிழக்குப்புறமாக சுமார் 150யார் தூரத்தில் ரோட்டின் குறுக்கே கற்களைக்கொண்டு தடுப்பு சுவர் ஒன்று அமைக்கமுயன்ற இராணுவ சிப்பாய்கள் மீது அப்பகுதியில் சென்றியில் நின்ற விடுதலைப்புலிகள் துப்பாக்கியால் சுட்டதில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (கே)

## துணுக்காய்க்கு இராணுவபவனி

ஒட்டுசுட்டான், வெள்ளி மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து இன்று காலை நூற்றுக்கு மேறபட்ட இராணுவத்தினர் கனரக கவசவாகனங்களில் துணுக்காயை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனல் இப்பகுதியில் பதற்றநிலை தோன்றியுள்ளது (இ)

## மட்டு.நகர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தற்போதுவரை தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது. இரண்டு பொம்பர்கள், இரண்டு ஹெலிக்காப்டர்கள் ஆகியவற்றைக்கொண்டு இராணுவம் முன்னேறமுயன்றபோதும் கடும் தாக்குதலால் அம்முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

## இலங்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பீடுகள் மற்றைய நாடுகளின் ஆட்சியை அசட்டைசெய்ய முடியாதெனவும் தெரிவித்துள்ளார் எனினும் இப்பிராந்தியத்திலும் அணிசேரா இயக்கத்திலும் இந்தியாவின் ஆட்சியை கருத்திற்கொள்ள முடியாததல்லவெனவும் அவர் கூறியுள்ளார்.

திரு. வல்கோவின் சர்வதேச பந்தோபஸ்து முறைபற்றிய அபிப்பிராயங்களைச் சாதகமாக இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. (கூ. கே.)

## பொருட்காட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நேற்றுக் கூட யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும். சாரிசாரியாக மாணவ மாணவிகள் பொது மக்கள் இளைஞர்கள் யுவதிகள் வாகனங்களில் வந்து பொருட்காட்சியைப் பார்வையிட்டனர். [மா]

## அசம்பாவிதங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணைக் குழுவொன்றை அரசு நியமித்து உடன் விசாரணையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றுகோரி மட்டக்களப்பு பிரஜைகள்குழு அவசர தந்தி ஒன்றை ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலிக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அந்தத் தந்தியில், அப்பாவி மக்கள்மீது படையினர் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், தரை, வான் தாக்குதல்களால் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மட்டக்களப்பு பதில் இணைப்பு அதிகாரி எஸ். பி. விக்கிரம திலகாவுக்கும் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [கூ- எ]

## சினைப்பர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இரும்புப்பாலத்தின் வளியாக ராணுவத்தினர் வெளியேவர முயற்சித்தசமயம் எமது வீரர்கள் குறிபார்த்து சுட்டதில் ஒருவர் கீழே சாய்ந்தார். அவரை மற்றவர்கள் இழுத்துக்கொண்டு மீண்டும் முகாமினுள் சென்று விட்டனர். இராணுவத்தினர் முகாமினுள் சென்றதன் பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.'' (ம)

## கடற் தொழிலாளர் போன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பென விழுந்து நீரில் மூழ்கியவாறு நீந்திக் கரைசேர்ந்து முகாமுககுள் தவழ்ந்து சென்றதைக் கண்டனராம். காயமடைந்திருக்கலா மெனச் சொல்லப்படுகிறது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ முகாமிலிருந்து சில துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இதனல் அச்சிப்பாய் பலத்த

## மரண அறிவித்தல்

### சபாபதி சரவணபவானந்தன்

கொழும்புத்துறை சபாபதி சரவணபவானந்தன் காலமானர். இவர் சிவசோதியின் கணவரும், மாத்தளை கமலநாதன், ஜேர்மனி லோகநாதன், செல்வநாதன், சுலோஜனதேவி. சரோஜாதேவி, சுசீலாதேவி ஆகியோரின் தந்தையும், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் இராமலிங்கம், எஸ். எம். கே. மெடிக்கல்ஸ் ரெங்கநாதன் ஆகியோரின் மாமனருமாவார். அன்னரின் ஈமைக்கிரியைகள் 20-9-86 சனிக்கிழமை காலை [இன்று] 10 மணிக்கு 178/6 ம் இலக்கத்தில் நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. [C 4721]

### இராமலிங்கம் இரத்தினசபாபதி

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய பொறியியலாளர் (Chief Engineer Designs) இராமலிங்கம் இரத்தினசபாபதி 19-09-86 காலமானர். இவர் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சபாநாதன், லிங்கநாதன், யோகநாதன் (K.A C Kuwait), வைத்தியநாதன் (கட்டட மேற்பார்வையாளர் அருண என்ட பிறைஸ்), சுவாமிநாதன், (நல்லை ஆதீன இளைஞர்மன்ற அமைப்பாளர், யாழ். மாவட்ட இ. இ. பேரவை தொண்டர் சபை ஆணையாளர், நல்லூர் விழிப்புக்குழு செயலாளர், யாழ் மாவட்ட சாரணர் கிளைச்சங்க உபதனதிகாரி) ஆகியோரின் தந்தையுமாவர் அன்னரது ஈமக்கிரியைகள் 20-09-86 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு மாலை 4-00 மணியவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிருேம். ''சரஸ்வதி வாசா'' திருநெல்வேலிவடக்கு. (C 4738)

## மரண அறிவித்தல்

### திருமதி வையித்திலிங்கம் செல்லம்மா

பண்ணுகம் திருமதி வையித்திலிங்கம் செல்லம்மா காலமானர். இவர் காலஞ்சென்ற வையித்திலிங்கத்தின் அன்பு மனைவியும், செல்வரத்தினம், அன்னபூபதி [நெசவு ஆசிரியர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சதாசிவம் [லிகிதர்], தர்மலிங்கம் [MSO] ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீகணேசமூர்த்தி [டென்மார்க்] கிருபாகரமூர்த்தி [சுவிஸ்லாந்து] தர்மபூபதி [P.G.H.S]. பாஸ்கரன் [V.H.C], தவமலர் [P.G.H.S.] ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னரின் பூதவுடல் 20ம் திகதி மாலை 3 மணியளவில் திருவடிநிலையில் தகனம் செய்யப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். ''தர்மபவனம்'', பண்ணுகம், சுழிபுரம். [C4741]

### திரு. V. K. குணரெத்தினசிங்கம்

காலஞ்சென்ற கனகசபை (சங்கரப்பிள்ளை) திருமதி சங்கரப்பிள்ளை அவர்களின் அன்புமகன் V. K. குணரெத்தினசிங்கம் (ஆயுள்வேத வைத்தியரும் சமாதான நீதிபதியும்) காலமாகிவிட்டார். அன்னர் செல்லம்மாவின் அன்புக்கணவரும் சிவானந்தசிங்கம் (நிலவள ஆராய்ச்சிப்பகுதி வவனியா), விஷயலெட்சுமி [லிகிதர் யாழ். கச்சேரி], ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயநிதியின் அருமை மாமனரும் காராளசிங்கம் ஓய்வு பெற்ற ஆசிரியர் நாரந்தனை, சுபாரெத்தினம் (தபாலகம் புங்குடுதீவு), திருமதி வேலுப்பிள்ளை திருமதி துரையப்பா ஆகியோரின் அன்புச்சகோதரரும், சசீவனின் அன்புப்பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரிகை 20-9-86 சனிக்கிழமை காலை 10 மணியளவில் புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தில் இருக்கும் அன்னரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.
C 4733 தகவல்: சிவானந்தசிங்கம்.

### ம. மனவல் மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

ம. மனவல் மரியாம்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் கசில்டா மங்களநாயகி (ஆசிரியை சென் ஜேம்ஸ் மகளிர்மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், மரினு கிறேஸ் நிலா (Holy Cross Convent), சூரியஜீவன் (யாழ். பல்கலைக்கழகம்), மடோனுசாமல், நித்திலா, சரத்ஜீவன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), சக்திஜீவன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும்,. திருமதி பிலோமினு ஜோர்ஜ், ம. அலோசியஸ் (முன்னுள் உதவி மேஜர் யாழ்ப்பாணம்), ம. டோமினிக், திருமதி. குணமணி சேவியர், திருமதி. Dr. மகேஸ் ராஜேந்திரா GoodWill Clinic Batticala), காலஞ்சென்றம. வின்செற் வின்சென்ற் மனேன் ஆகியோரின்அன்புச் சகோதரருமாவார். அன்னரின் பூதவுடல் 20-9-86 சனிக்கிழமை மாலை 3-45 மணிக்கு இல. 5, சென்பற்றிக்ஸ் வீதியிலிருந்து பரி. கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். [C-4739]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.